


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 179 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 26 – திங்கள்கிழமை 09 பிப்ரவரி 2026 – வெளியூர் 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 179 : Thiruvalluvar Year - 2057 - Thai 26 - Monday 09 February 2026 - Dak 20 Pages ₹ 5.00


### பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு ஜீரோ என்று சொன்ன ஒன்றிய

# பா.ஜ.க. அரசுக்கு தேர்தலில் ஜீரோவையே திருப்பித் தர வேண்டும்!

## விருதுநகர் – கழக இளைஞர் அணியின் தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**விருதுநகர், பிப்.9 –**

**பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஜீரோ என்று சொன்ன ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு, தேர்தலில் அதையே திருப்பித் தர வேண்டும் என்று விருதுநகரில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணியின் தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சியுரையில் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (07.02.2026) விருதுநகரில் நடைபெற்ற கழக இளைஞரணியின் தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் ஆற்றிய எழுச்சியுரை வருமாறு:–**

இங்கே கூடியிருக்கும் உங்களை எல்லாம் பார்க்கும்போது, மற்றவர்களுக்கு என்ன தோன்றும் என்றால், “தி.மு.க. என்றால் பிரமாண்டம்! அதிலும், இளைஞரணி என்றால் பிரமாண்டம்! இன்னும் சொன்னால், உதயநிதி என்றால் பிரமாண்டம்!” ஏனென்றால், பலருக்கும் பொதுக் கூட்டங்களை நடத்துவதே பெரிய சவாலாக இருக்கிறது. ஆனால், நமக்கு, மாநாடுகள் என்பது வாரா வாரம் நடக்கக் கூடியதாக இப்போது ஆகிவிட்டது.

இந்த மாநாடு மட்டுமல்ல; ஏற்கனவே நடந்தியிருக்கும் மாநாடுகள் மட்டுமல்ல; இந்த மாதம் மட்டும் 5 மாநாடுகள் நடைபெற இருக்கின்றன. அதற்குத் தொடக்கமாக, இந்த விருதுநகர் மாவட்டத்தில், இந்தச் சந்திப்பைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் தம்பி உதயநிதி அவர்களை, நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், தலைமைக் கழகத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன்! அதேபோன்று, இளைஞரணி நிர்வாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளை விருதாக, இந்த விருதுநகரில் வழங்குகிறேன்!

**விருதுநகரில் மாநாடு நமது வெற்றி உறுதி!**

விருதுநகர் என்று சொன்னாலே, நமக்கு நினைவிற்கு வருவது, கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள்! பெருந்தலைவர் காமராசர் என்று சொன்னாலே, அனைவருக்கும் நினைவிற்கு வருவது, மதிய உணவுத் திட்டம்! அதுபோன்று, இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் என்று சொன்னால், அனைவருக்கும் நினைவுக்கு வருவது, காலை உணவுத் திட்டம்!

விருதுநகரில் மாநாடு நடந்தது என்றால், அடுத்து வருகின்ற தேர்தலில், நம்முடைய வெற்றி உறுதி! நினைத்துப் பார்க்கிறேன்.. 2004-இல் ‘தென்மண்டல மாநாடு’ நடத்தினோம்! 40-க்கு 40 வெற்றி பெற்றோம்! 2019-இல் தேர்தல் பரப்புரையை இங்கே இருந்து தொடங்கி, 39 இடங்களைக் கைப்பற்றினோம்! 2023-இல் “நாற்பதும் நமதே” என்று இங்கே சொல்லித் தொடங்கிதான், 2024-இல் நாற்பதுக்கு நாற்பது வெற்றி பெற்றோம்!

இப்போது, 2026. புதிய சாதனை படைக்க நீங்கள் தயாரா? நம்முடைய டார்கெட் என்ன? வெல்வோம் இருநூறு! அதற்காக உழைக்க நீங்கள் ரெடியா? “கான்ஃபிடெண்டாக” இருக்கும் உங்களைப் பார்க்கும்போது, என்னுடைய நம்பிக்கையும் இன்னும் பல மடங்காகி, உற்சாகத்தைக் கூட்டுகிறது!

இந்த விருதுநகர் மாவட்டத்தில் கால் பதித்ததுமே, எனக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தது! தம்பி உதயநிதி பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்… இந்த மாவட்டத்தில் என்னுடைய காலடித் தடம் பதியாத கிராமமே கிடையாது! அந்தளவிற்கு இளைஞரணியைத் தொடங்கியபோது, அப்போது இந்த ஒருங்கிணைந்த மாவட்டத்தின் செயலாளராக இருந்த, அண்ணன் தங்கபாண்டியனுடன் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று, நான் கொடியேற்றி இருக்கிறேன்! எப்போது விருதுநகருக்கு வந்தாலும், அந்தப் பாசத்தையும், நேசத்தையும் குறைவில்லாமல் கொடுப்பவர்கள்தான், இந்த விருதுநகர் மாவட்ட மக்கள்!

**மருது சகோதரர்கள் போல் பணியாற்றும் இரு மாவட்டச் செயலாளர்களுக்கும் பாராட்டு!**

இந்த விருதுநகர் மண்ணில் மருது சகோதரர்களைப் போன்று இணைந்து பணியாற்றி, கழகக் கோட்டையைக் கட்டிக் காக்கும் - கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கும், தங்கம் தென்னரசு அவர்களுக்கும், என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்! பாருங்கள், இரண்டு பேரும் எழுந்து ஒரே நேரத்தில் வணக்கம் வைக்கிறார்கள்.

நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களைப் பொறுத்தவரைக்கும், மிகவும் பாசக்காரர். யாரைப் பார்த்தாலும், அண்ணாச்சி, அண்ணாச்சி என்றுதான் அழைப்பார். பாசமாகப் பழகுவார். இதுவரைக்கும், தமிழ்நாடு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, இந்த 5 ஆண்டுகளில் சுமார் 22 இலட்சம் நபர்களுக்குப் பட்டாக்களை அவர் மூலமாக வழங்கியிருக்கிறோம்! அப்படிப்பட்ட சாதனைத் துறையை வழிநடத்தும் அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

அதேபோன்று, இந்த மாநாட்டை மிக மிக எழுச்சியோடும், ஏற்றத்தோடும் ஏற்பாடு செய்திருக்கிறார், நம்முடைய நிதி அமைச்சர் - அருமைச் சகோதரர் - இனிய சகோதரர் தங்கம் தென்னரசு அவர்கள்! எந்தத் துறையைக் கொடுத்தாலும், அந்தத் துறையில் தனி முத்திரையை பதிக்கக் கூடியவர் அவர்! பன்முக ஆற்றல் கொண்டவர் அவர்! தமிழ் ஆர்வலர்! இந்த மாநாட்டின் மூலமாகவும் புது முத்திரையை பதித்திருக்கிறார்!

இங்கே இருக்கும் இளைஞரணியினர், இவர்கள் இரண்டு பேரையும் பாருங்கள்! கே.கே.எஸ்.எஸ்.ஆர் சீனியர்! தங்கம் தென்னரசு இளையவர். ஆனால், இரண்டு பேரும் ஒற்றுமையாக - ஒருவருடன் ஒருவர் இணைந்து, ஆக்கப்பூர்வமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! நீங்கள் அனைவரும் இவர்களைப் பார்த்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்! இவர்கள் உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு!

**இளைஞர்களை கொள்கைப் பிடிப்போடு வழிநடத்தும் உதயநிதி ஸ்டாலின்!**

இங்கே கூடியிருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களை நான் கேட்க விரும்புவது, உங்களைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது! காரணம், நான் பார்த்துப் பார்த்து வளர்த்த இளைஞரணியில், உங்களையெல்லாம் பார்க்கும்போது, அந்த மகிழ்ச்சி டபுள் ஆகிறது, ட்ரிபுள் ஆகிறது!

நம்முடைய திராவிட இனத்தின் மேன்மைக்காக - தமிழ்மொழியின் உயர்வுக்காக - தனித்துவமான தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக - உங்கள் அனைவரையும் கொள்கைப் பிடிப்போடும் - கழகப் பற்றோடும் - வளர்த்தெடுக்கிறார், இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள்!

உதயநிதியின் செயல்பாடுகளை நான் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்! ஏதோ பெயரளவிற்கு இளைஞர்களை அரசியல் இயக்கத்தில் சேர்த்தால் போதும் என்று உதயநிதி செயல்படவில்லை! இளைஞரணி நிர்வாகிகளை மிகவும் சிஸ்டமேட்டிக்காக - பூத் அளவில் தொடங்கி, மாநில அளவு வரைக்கும் தேர்வு செய்து, பயிற்சி


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்






கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.2.2026) விருதுநகரில் கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில் முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ. பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, மாவட்டக் கழக செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜோயல், ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஆனந்தகுமார், ராஜா, தலைமை கழகத்தின் நிர்வாகிகள், இளைஞர் அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### உதயநிதியின் செயல்பாடுகள்...



*உதயநிதியின் செயல்பாடுகளை நான் தொடர்ந்து உன்னிப்பாககவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்! ஏதோ பெயரளவிற்கு இளைஞர்களை அரசியல் இயக்கத்தில் சேர்த்தால் போதும் என்று உதயநிதி செயல்படவில்லை! இளைஞரணி நிர்வாகிகளை மிகவும் சிஸ்டமேட்டிக்காக - பூத் அளவில் தொடங்கி, மாநில அளவு வரைக்கும் தேர்வு செய்து, பயிற்சி கொடுத்து, உங்களை ‘நியூ ஏஜ் திரவிடியன் ஸ்டாக்’-ஆக உருவாக்குகிறார். நீங்கள் ஒவ்வொருவரும்தான் - தந்தை பெரியாரின் கொள்கை வாரிசுகள்! பேரறிஞர் அண்ணாவின் கொள்கை வாரிசுகள்! முத்தமிழறிஞர் கலைஞரின் கொள்கை வாரிசுகள்! நீங்கள்தான், அடுத்து நம்முடைய கழகத்தையும் - தமிழ்நாட்டையும் காப்பாற்றப் போகிறீர்கள்.*

---

### மாநிலத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து தாமதங்களுக்கு வழி வகுப்பதால்

# தமிழ்நாட்டு ரயில்வே திட்டங்களுக்கு விரைந்து நிதி ஒதுக்கிடுவீர்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, பிப். 9 -**

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் அனுமதிக்கப்பட்ட இரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் தாமதமின்றி முழுமையாக முன்னுரிமை அடிப்படையில் விடுவித்திடவும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய திட்டங்களை அனுமதித்திடவும் உரிய அறிவுரைகளை இரயில்வே அமைச்சகத்திற்கு வழங்கிட வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் இரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை முறையாக விடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் பிரதமர் அவர்கள் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காணவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இது தொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்தி களுக்காகவும் இக்கடிதத்தினை தான் எழுதுவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**நிலம் கையகப்படுத்த நிர்வாக ஒப்பந்தம்!**

தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500.61.06 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் 931.52.96 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு இரயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இரயில்வே துறையிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை (LPS) பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது என்றும், அது விரைவில் வழங்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

19 முக்கிய இரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273.05.15 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு இரயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மதுரை - தூத்துக்குடி அகல ரயில் பாதை!**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம் – நகரி அகல இரயில் பாதை, மதுரை – தூத்துக்குடி அகல இரயில் பாதை, மணியாச்சி - நாகர்கோவில் அகல இரயில் பாதை, கன்னியாகுமரி – நாகர்கோவில் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில் - இரணியல் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், தூத்துக்குடி - மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை (கட்டம்I), சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை, மயிலாடுதுறை – திருவாரூர் அகல இரயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல இரயில் பாதை (சேலம் - கரூர் வழித்தடம் உருவாக்குதல்),

மன்னார்குடி - நீடாமங்கலம் அகல இரயில் பாதை, சென்னை கடற்கரை - கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம் - திண்டுக்கல் அகல இரயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்றும், மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

**நிதியை விடுவிக்காமல் தாமதப்படுத்துவதா?**

நில எடுப்புப் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு நில உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்குவது மிக முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், துரதிர்ஷ்டவசமாக, இரயில்வே அமைச்சகத்தால் நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதங்கள், தனிப்பட்ட திட்டங்களுக்குப் பெரும்பாலும் நிதியினை முழுமையாக வழங்காமல் பிரித்து வழங்குவது என்பது, தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தினைத் தடுத்து, தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நீடித்த நிச்சயமற்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்